**கம்பளை நகர சபை - 2024**

-----------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கம்பளை நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் நகர சபை சட்டத்தின் (255 அதிகாரம்) 181 (1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பளை நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாடு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைகள் தொடர்பான விசேட விதிமுறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுகள் முன்னைய ஆண்டுடன் ஏற்புடையதாகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்
### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் காணப்பட்ட ரூபா 752,931 ஆன நூலக நிலையான வைப்புக்கள் நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திற்குரிய சபையினால் செலுத்த வேண்டியதாக காணப்பட்ட ரூபா 38,073,118 தொகையான நிலுவை கடன் வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நாட்குறிப்பு பதிவு மூலம் நிருபணமாக் குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | - மேற்படி - |
| (இ) | 77 ஆம் இலக்க நாட்குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்த நானவித கடன்பட்டோரில் வரவு மீதிகளின் மொத்தம் ரூபா 354,628 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 561,686 ஆன செலவினம் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நானாவித கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | 45 ஆம் இரக்க நாட்குறிப்பு இல் 2023 ஆம் ஆண்டின் சீராக்கங்களை சரி செய்வதாக குறிப்பிடப்பட்டு உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு | நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட |

| | | |
|---|---|---|
| ரூபா 163,813 வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியத்திற்கு செலவாக காண்பிக்கப்பட்டிருந்த பதிவு இரத்து செய்யப்பட்டு இருக்கையில் அப்பெறுமதி தவறாக ரூபா 163,813 தொகை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டு பின்னர் உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது | | வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்ட 06 சொத்து விடயங்களின் மீதிகள் மற்றும் உரிய அட்டவணைகளுடன் ஒப்பிடும் போது ரூபா 84,545,686 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | விரைவில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கணக்கு மீதிகள் உரிய அட்டவணைகளுடன் ஒப்பிடப்பட்டு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் மீதிகள் மற்றும் மூலதன ஈடுபாட்டுக்கு வருமானத்தில் பங்களிப்பு கணக்கின் மீதிக்கு இடையே ரூபா 115,740 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | கடன் மீதிகளை கண்டுபிடிக்க முடியாமல் உள்ளதாக. | நிலையான சொத்துக்கள் மீதி மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தால் பங்களிப்பு கணக்கின் மீதிக்கு சமமாக இருக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காயிலுக்காக எழுத்து மூலம் சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 78 ஆம் இலக்க நாட்குறிப்பின் பிரகாரம் கொடுத்தோர் மிகை ஒதுக்கீடு மற்றும் குறை ஒதுக்கீடு சீராக்கத்திற்காக ரூபா 11,848,761 தொகையை திறந்த நிதியத்திற்கும் நானாவித கடன் கொடுத்தோருக்கும் சீராக்கப்பட்டு இருந்த போதும் அச் சீராகத்துக்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் கடன்கொடுதோர் மீதியை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களையும் உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **பாராளுமன்ற சட்டங்கள்** | | | |
| | 2021 ஜூலை 08 ஆந் திகதிய 2235/54 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 08 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அந்தச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் திருத்தப் பட்ட திட்டமிடல் மற்றும் கட்டிடகட்டளை / பிரமாணங்களின் VI ஆம் பகுதியின் 83.1 ஆம் பிரிவு | 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட 226 கட்டிடங்களுக்காக இனக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டு இருக்கவில்லை. | எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதாக. | கட்டிடங்களை பரீட்சித்து இணக்க சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| (i) | நி.பி. 571(3) | .2017 ஆம் ஆண்டு முதல் 2024 வரையான காலப் பகுதிக்கரிய காலாவதியான ரூபா 1,714,543 ஆன காலாவதியான 87 வைப்புக்கள் தீர்வு செய்யப்படவில்லை. | எதிர்காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | காலாவதியான வைப்புக்கள் தீர்வு செய்யப்படுதல் வேண்டும். |
| (ii) | நி.பி 486 | ரூபா 556,853 பெறுமதி யான 24 காசோலைகள் மறுக்கப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக மீளாய் வாண்டு இறுதி திகதி வரையிலும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | 104(3) பரிசோதனை தற்போது நடைபெற்று வருவதாக. | விரைவில் உரிய பரிசோதனைகளை நடத்தி பணத்தை அறவிட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| **(இ)** | **1987 செப்டம்பர் 30 ஆம் திகதிய** 05/1/119 **ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் சுற்றறிக்கை** 08 | நகர அபிவிருத்தி அதிகார சபைக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள முதலீட்டு கணக்கில் உள்ள பணம் நகர அதிகாரசபையிடம் விசாரித்து பிரதேச அபிவிருத்திக்கு பயன்படுத்த முடியுமான போதிலும் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 1,632,902 ஆன மீதியில் இருந்து எவ்வித தொகையும் பிரதேச அபிவிருத்திக்கு பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | தேவையான நடவடிக்கைகள் எடுப்பதாக. | கணக்கில் உள்ள பணத்தை பிரதேச அபிவிருத்திக்கு பயன்படுத்தப்பட வேண்டும். |
| **(ஈ)** | **ஏனைய சுற்றறிக்கைகள்** | | | |
| | 1988 மே 17 ஆந் திகதிய 1988/22 ஆம் இலக்க உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | வீதவரி அறவிடுவதற்குரிய ஆதனங்கள் 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2024 ஆம் ஆண்டிறகாக 2008 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு அடிப்படையாகக் கொண்டு வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | விலை மதிப்பீட்டு திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக. | 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை உரிய ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு வீத வரி அறவிடப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 76,622,817 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 67,273,302 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 34,205,500 | 34,334,628 | 30,679,761 | 64,371,059 | 32,505,500 | 33,362,197 | 31,601,307 | 60,716,192 |
| (ii) | வாடகை | 62,249,400 | 39,958,548 | 48,715,835 | 91,647,326 | 45,870,000 | 28,270,288 | 22,474,868 | 100,404,613 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 4,201,300 | 7,407,590 | 6,321,840 | 2,695,812 | 3,950,000 | 3,685,664 | 3,737,664 | 1,610,062 |
| (iv) | ஏனைய வருமானம் | 127,025,500 | 83,013,208 | 106,332,556 | 50,788,249 | 132,447,200 | 51,464,626 | 43,504,763 | 74,107,597 |
| | | 227,681,700 | 164,713,974 | 192,049,992 | 209,502,446 | 214,772,700 | 116,782,775 | 101,318,602 | 236,838,464 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| **(i) வீதவரி** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வீதவரி நிலுவை ரூபா 63,355,277 ஆக இருந்ததுடன் ரூபா 10,000 இற்கு மேற்பட்ட நிலுவையாக காணப்படும் 1741 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 37,287,464 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. 1987 இன் 18 ஆம் இலக்க நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) 170 ஆம் பிரிவின் நடவடிக்கை எடுத்து நிலுவை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவையை அறவிடு வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| **(ii) காணி வரி** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபை காணி வரி நிலுவை ரூபா 3,546,235 ஆக இருந்ததுடன் அந்நிலுவையில் ரூபா 10,000 இற்கு மேற்பட்ட நிலுவையாக காணப்படும் 64 நிலுவை வீதவரி அலகுகளில் ரூபா 3,206,028 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையில் 2025.05.23 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 456,938 தொகை அறவிடப்பட்டுள்ளதாக. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(iii)** | **களியாட்ட வரி** | | |
| | மீளாய்வாண்டில் ஜனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 429,732 ஆன நிலுவை மீறி ஒன்று காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் பட்டியலிடல் ரூபா 423,821 ஆக மொத்தம் ரூபா 853,553 தொகை அறவிடப்பட வேண்டி இருந்த போதும் மீனாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 792,781 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ)** | **கடை வாடகை** | | |
| (i) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நகர சபைக்கு சொந்தமான 05 பொது வியாபார கடைத் தொகுதிகளின் 184 கடைகளில் இருந்து ரூபா 34,186,000 கூட்டுத்தொகையான கடை வாடகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக. | - மேற்படி - |
| (ii) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு சபைக்குரிய 03 இறைச்சி கடைகளில் இருந்தும் 5 மீன் கடைகளில் இருந்தும் மொத்தம் ரூபா 1,742,217 ஆன வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| **(இ)** | **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்** | | |
| | மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 324,250 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 40,136,100 ஆக இருந்தது. | நிலுவைத் தொகையில் ரூபா 79,000 அறவிடப்பட்டுள்ளதாக. | - மேற்படி - |
| **(ஈ)** | **ஏனைய வருமானம்** | | |
| **(i)** | **முச்சக்கர வண்டி கட்டண அறவீடு** | | |
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு முச்சக்கர வண்டி கட்டண நிலுவை ரூபா 5,266,058 ஆக இருந்ததுடன், அந்நிலுவையில் ரூபா 10,000 இற்கு மேற்பட்ட நிலுவை காணப்படுகின்ற 225 அலகுகளிலிருந்து ரூபா 2,883,000 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக. | - மேற்படி - |

**(ii) வாடி வீட்டு கட்டணம்**

| | | |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டு முதல் காணப்படும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,807,021 நிலுவை நிலுவை வாடிவீட்டு கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும். |

**(iii) அறிவித்தல் பதாதைகள்**

| | | |
|---|---|---|
| 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 520/07 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட (உள்ளூராட்சி மன்ற உறுப்புரை) சட்டத்தின் 39.1.2 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 1,668,320 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பளை இபொச பேருந்து நிறுத்தமிட கடைத் தொகுதியின் குத்தகையாளர் ஒருவரிடம் இருந்து மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 6,210,832 தொகை அறவிடப் பட்டிருக்கவில்லை. அவ்வாறே கடை வாடகை மதிப்பீட்டு அறிக்கை ஒன்று பெற்றுக் கொள்வதற்கு 2022 மார்ச் 23 ஆம் திகதி 04:1:XIX ஆம் இலக்க பொதுச்சபை தீர்மானம் ஒன்று பெற்றிருந்த போதும் மதிப்பீட்டை கோருவதற்கு 2024 பெப்ரவரி 08 ஆந் திகதி வரையும் தாமதிக்கப்பட்டு இருந்தது. | மதிப்பீட்டு வேண்டுகோள் தாமதமானதாக. | வருமான அறவீடு செய்யப்பட வேண்டியதுடன் உத்தியோகத்தர்களின் கவனயீனம் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | புக்கயிரத திணைக்களத்திடமிருந்து குத்தகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ஆதனங்களுக்காக 2021 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை மொத்தம் ரூபா 4,739,175 ஆன குத்தகை வாடகை கொடுப்பனவு செய்யப்பட்டு இருக்கவில்லை. | தேவையான அடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | செலுத்த வேண்டிய குத்தகை வாடகை தீர்வு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2016 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை ரூபா 1,428,730 ஆன கட்டிடங்கள் விண்ணப்ப பரிசோதனை கட்டணங்கள் வருமானத்துக்கு செலவு வைக்கப்படாமல் | - மேற்படி - | வருமானத்திற்கு எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. . | | |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு இடமாற்றம் பெற்றுச்சென்ற ஓய்வு பெற்ற மற்றும் சேவையிலிருந்து விலகிச் சென்ற 31 உத்தியோ கத்தர்களிடம் இருந்து 01 ஆண்டிற்கும் 05 இற்கும் இடைப்பட்ட காலமாக ரூபா 1,406,220 ஆன மீதி ஒன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | ஊழியர் கடன் மீதிகளைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2020 செப்தம்பர் 28 ஆந் திகதிய 2020/06 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் சபையின் மிகை நிதியை வருமானம் ஈட்டக்கூடிய திட்டங்களில், சொத்துக்களை அபிவிருத்தி செய்தல் அல்லது பெரும்பான்மையான மக்களுக்கு பொது வசதிகளை வழங்கக் கூடிய செயற் திட்டங்களில் முதலீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாமல் நிலையான வைப்புக்களில் ரூபா 143,094,019 தொகையும் சேமிப்புக் கணக்குகளில் ரூபா 21,169,252 தொகையும் நடைமுறைக் கணக்கில் ரூபா 155,519,856 தொகையான மீதியொன்றும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி காணப்பட்டது. | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் நிறைவேற்றப்படும் வகையில் ஈடுபடுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | பொது வியாபார தொகுதியில் 19 கடைகள் உடன்படிக்கை இன்றி முறையற்ற வகையில் வியாபாரம் செய்வதற்கு இடம் அளிக்கப்பட்டிருந்தது. | ஏனையவர்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | முறையாக உடன்படிக்கை செய்யப்பட வேண்டியதுடன் உரிய கூலி அறவிடப்பட வேண்டும். |

### 3.2 விளைவற்ற அல்லது குறை பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர சபைக்கு சொந்தமான ரூபா 8,009,373 கூட்டுத்தொகையான 04 வாகனங்கள் 6 ஆண்டு காலமாக விளைவற்று அல்லது குறை பயன்பாட்டுடன் காணப்பட்டன. | தற்போது உழவு இயந்திரம் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் கம்பெக்டெர் திருத்தங்களுக்காக விடுவிக்கப்பட்டுள்ளதாக. | பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பொது வியாபார சந்தை தொகுதியின் 38 கடைகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பயன்படுத்தப்படாமல் மூடி வைக்கப்பட்டிருந்தன. | மதிப்பீடு கிடைத்த பின்னர் கேள்வி கோரி வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கேள்வி நடைமுறை பின்பற்றப்பட்டு வாடகைக்கு வழங்கப்பட வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை பயன்படுத்துகின்ற 102 காணிகளின் உரித்தினை உறுதிப் படுத்தப்படுவதற்காக அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அளவீட்டு நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்வதாக. | சபைக்கு சொந்தமான ஆதனங்களின் உரித்து உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டின் சொத்துக்கள் கணிப்பீட்டின் கீழ் இனங்காணப்பட்டு இருந்த 235 காணிகள் மற்றும் கட்டிடங்கள் மற்றும் ரூபா 4,394,000 ஆன பொப்கேட் இயந்திரத்தின் உரித்து கையேற்கப்பட்டு இருக்கவில்லை. | எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதாக. | சபைக்கு சொந்தமான ஆதனங்களின் உரித்து கையேற்கப்பட வேண்டும். |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியினருடன் ஒப்பிடும் போது 22 பதவிகளில் 79 வெற்றிடங்களும் பதவியொன்றில் 11 மிகைகளும் காணப்பட்டன. இந்த ஊழியர் பற்றாக்குறை நிலைமை பொதுச் சேவைகளை நடத்திச் செல்வதற்கு அதிக அளவில் தாக்கம் அளித்து இருந்தது. | ஆர்சேர்ப்பதற்கு எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்ளப்பட்டு வருவதாக. | வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டு பொதுச் சேவைகள் வினைத்திறனாக நிறைவேற்றப்பட வேண்டும். |

### 3.5 வாகன முறைமை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான காணப்படுகின்ற வாகனம் ஒன்று உள்ள திருத்தங்களுக்காக 2022 ஜுன் 15 ஆம் திகதி வாகனங்கள் திருத்தும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டு 2 ஆண்டுகளும் 06 மாதங்களும் கடந்து இருந்த போதும் அத்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு மீண்டும் நகர சபைக்கு பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | பின் தொடர் நடவடிக்கை எடுத்து திருத்தங்களை விரைவில் மேற்கொண்டு பயன்படுத்தப்பட வேண்டும். |